புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

=====================================================================

# கருத்தாடல் நோக்கில் சங்க இலக்கிய கூற்றுகள்

முனைவர் வே.சண்முகராஜ்
முனைவர் பட்ட மேலாய்வாளர்
மொழியியல்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை – 625 021

=====================================================================

ஆய்வுச்சுருக்கம்

மொழி நம் கருத்தை, எண்ணங்களை, வெளிப்படுத்துவதற்கான கருவி என்பதைப் போலவே இலக்கியமும் நம் வாழ்க்கையை, வாழ்க்கையைப் பற்றிய சிந்தனைகளை, மரபை, வெளிப்படுத்துகிற கருவியாக அமைகிறது. அவ்விலக்கியங்கள் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் அந்தந்தக் காலக் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளின் அடிப்படையில் அணுகப்பட்டிருக்கின்றன. காலந்தோறும் மாறிவந்த சூழலியல், சமுதாயவியல், மொழியியல், நடையியல், உரையாடலியல், உளவியல், கட்டமைப்பியல் போன்ற அணுகுமுறைகளோடு பொதுவுடைமைக் கொள்கை, பெண்ணியக் கொள்கை போன்றவைகளும் இலக்கியங்களை மறுவாசிப்பு செய்திருக்கின்றன; ஆராய்ந் திருக்கின்றன. இக்கட்டுரை கருத்தாடல் நோக்கில் சங்க இலக்கியங்களில் வரும் 'கூற்றுகளைப்' பற்றி ஆராய முனைகிறது.

குறிப்புச்சொற்கள் : சங்க இலக்கியம், கூற்று, கருவி, யாப்பு, இலக்கியம், கருத்தாடல், நடை, பண்பு

## முன்னுரை

இலக்கியத்தை அணுகும்போது அதில் அமையும் சொல் தேர்வு, தொடரமைப்பு, பொருண்மைக் கோட்பாடுகள், உள்ளுறை, இறைச்சி, குறிப்புப் பொருள், நடை போன்றவை இலக்கியத்தின் மொழி அமைப்பை அடிப்படையாகக் கொண்டு விளக்க முயன்றன. ஒலியனியல், புணரியல், உருபனியல், தொடரியல் கூறுகளோடு யாப்பு வாயிலாகவும் அணுகுவது மரபு. தகவல் பரிமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டு மொழியையும் இலக்கணத்தையும் அணுகும்போது அது மொழிப் பயன்பாட்டு ஆராய்ச்சி ஆகிறது. இவ்வாறு அணுகும்போது இலக்கியத்தில் வரும் மொழிக் கூறுகளான: வடிவம், அமைப்பு, எல்லை, பொருண்மை, பயன்பாடு, செயல்பாடு, வகைமை, தொடர்பு என்னும் எட்டுக்கூறுகளையும் ஆராய்வது ஒரு வகை.

இதைப்போன்றே இலக்கியக் கூறுகளான: புலப்பதிவு, பாடப்பொருள், தகவல், வெளிப்பாடு, முறையமைப்பு, பாத்திரப் புனைவு, உத்தி, பண்பாட்டுக் கூறுகள் என்னும் எட்டுக் கூறுகள் வாயிலாக ஆராய்வது இன்னொரு வகை.

கருத்தாடல் அல்லது கருத்துக்கோவை என்னும் நோக்கில் அணுகும்போது கூட மொழிப்பயன்பாடு சிறப்புக் கூறாக அமையினும் முழுப்பனுவலும் அதன் வடிவமும் மிகமுக்கியக் கூறாக அமைகின்றது. 'ஏன், எதற்காக, எவ்வாறு' என்னும் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் விதமாகத் தேவை, செயற்பாடு போன்றவைகளின் அடிப்படையில் இலக்கியத்தைப் பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

பேச்சு / எழுத்து / சுற்றுச்சூழல் / சமுதாயப் பழக்கவழக்கங்கள் / இலக்கிய மரபுகள் சார்ந்து சூழலுக்கும், தகவலுக்கும், பாத்திரங்களுக்கும் ஏற்ப மொழியும் அமைப்பும் மாறுபடுவதைக் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாகக் 'கூற்றுகளைக்' கூறலாம்.

பெரும்பாலும் பனுவலை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்போது தனிமொழி, உட்பேச்சு, உரையாடல், கருத்தாடல் என அணுக முடியும்.

தனிமொழி

பெரும்பாலும் நாடகத்தில் பாத்திரம் தனியாகப் பேசிக் கொள்வது இது. குறுந்தொகையிலிருந்து ஒரு பாடல்

*'கார்புறந் தந்த நீருடை வியன்புலத்துப்*
*பலர் புகுதரூஉம் புல்லென் மாலை -*
*முல்லை! வாழியோ, முல்லை - நீநின்*
*சிறுவெண் முகையின் முறுவின் கொண்டனை*
*நகுவை போலக் காட்டல்*
*தகுமோ, மற்று இது தமியோர் மாட்டே?'* (குறுந்தொகை-162)

முல்லையைப் பார்த்துப் பேசும் இப்பாடல் தனிமொழியாகும்.

உட்பேச்சு

தனியாக ஒருவர் தன் உள்ளத்தோடு பேசிக் கொள்வது. சங்க இலக்கியங்களில் இவை உண்டு. எடுத்துக்காட்டாக,

*யாரும் இல்லை; தானே கள்வன்;*
*தான் அதுபொய்ப்பின் யான்வென் செய்கோ?*
*தினைத்தாள் அன்ன சிறு பசுங்கால்*
*ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்*
*குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே* (குறுந்தொகை-25)

உரையாடல்

இன்றையக் காலகட்டத்தில் உரையாடலியல் ஆய்வு சிறப்பான பங்கு வகிக்கிறது. பங்கு பெறும் இருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் உரையாடும்போது பயனாகின்ற மொழி, மொழிக்கூறுகள், தொடரமைப்புகள், பதிலளித்தல் போன்ற பலகூறுகளையும் பற்றிய ஆய்வாக எடுத்துக் கொள்ள வேண்டும். இக்கட்டுரையில் அவற்றைப் பற்றி ஆராயவில்லைத் தலைப்பை ஒட்டிப் பேச வேண்டும் என்ற காரணத்தால்.

கருத்தாடலியல்

கருத்தாடல் என்பது மொழி சார்ந்த, தகவல் சார்ந்த ஒரு செயற்பாடு. இருவருக்கு இடையே நடக்கின்ற ஊடாட்டத்தை ஆராயப் புகுவதுவே கருத்தாடலியல். இதில் பேசுவர் - கேட்பவர்; எழுதுபவர் - வாசிப்பவர் என்ற வகையில் தகவல் பரிமாற்றம் அமையும். எனவே, கருத்தாடலியலை இருவகையாகப் பிரித்துக் கொள்ளலாம்.

1. பேச்சுக் கருத்தாடலியல்
2. எழுத்துக் கருத்தாடலியல்

இந்த இருவகை கருத்தாடலிலுள்ளும் எழுத்துக் கருத்தாடல் மட்டுமே, அதிலும் குறிப்பாக, இலக்கியக் கருத்தாடல் மட்டுமே ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இலக்கியத்திற்கு என ஒரு மரபு, யாப்பு, உள்ளடக்கம், உத்திகள் எனப் பலப்பலக் கூறுகள் உள்ளன. அவற்றை உணர்ந்து கொண்டால்தான் தகவல் பரிமாற்றம் சிறப்பாக நடக்கும். இல்லையெனில் படைப்பாளியின் குறிக்கோள் வாசிப்பவரைச் சென்று அடையாது.

எடுத்துக்காட்டாக, சங்க இலக்கியத்தைப் புரிந்து கொள்ளக் கீழ்வருபவற்றில் திறன் பெற்றிருக்க வேண்டும்.

1. சொல்லாட்சி
2. புணர்ச்சி விதிகள்
3. தொடரமைப்புகள்
4. பொருண்மைக் கூறுகள்

என மொழியியல் கூறுகள் பற்றிய அறிவு தேவைப்படுகிறது. இவற்றோடு இலக்கியக் கூறுகளாக வருகின்ற யாப்பு, உள்ளுறை, இறைச்சி போன்ற கூறுகள் பற்றிய அறிவும் வேண்டும்.

இவற்றையும்தாண்டி இலக்கியக் கருத்தாடலியல் பற்றிய 'அறிமுகமும்' தேவையாகும். இக்கருத்தாடலில் படைப்பாளி செய்திகளை நேரடியாகச் சொல்லாமல் மறைமுகமாகவும்; எதை அல்லது எப்படி என்ற கேள்விகளின் பதில்களாக அமையுமாறும் அமைத்து விடுகிறார். விதி விலகல்கள், குறைத்தொடர்கள் போன்ற கூறுகளின் அமைப்பும் பயனும் மட்டுமே இலக்கியத்தைப் புரிந்து கொள்ளப் போதுமானது எனக் கூறமுடியாது. எனவே, கருத்தாடல் ஆய்வில் 'வடிவமைப்பு' என்ற கூறு தேவையாகிறது. இலக்கியம் ஒரு 'கலவை' அதில் வருகின்ற பலகூறுகளில் 'வடிவமைப்பு' என்பது மிக முக்கியமான கூறாகும்.

வடிவமைப்பைப் பற்றிக் காணும் முன்னர் கருத்தாடலின் ஒரு சில சிறப்புக் கூறுகளைப் பற்றிக் காணலாம். கருத்தாடலில் இருவகை உண்டு.

1. இருவழிக் கருத்தாடல்
2. ஒரு வழிக் கருத்தாடல்

இருவழிக் கருத்தாடல் பெரும்பாலும் உரையாடல் போல அமைகின்றதால் இக்கட்டுரை ஒருவழிக் கருத்தாடலை மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ளது.

படைப்பாளிக்கும் வாசிப்பவருக்கும் இடையில் ஓர் 'ஊடாட்டம்' நடக்க வேண்டுமெனில் படைப்பு சிறப்பாக அமைய வேண்டும். அதில் வரும் பாத்திரம் / பாத்திரங்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டும். படைப்பாளியின் 'மொழிச்செயலை' அறிந்து கொள்வதற்கு 'பொருள் மயக்கம்', 'கருத்து மயக்கம்' இல்லாமல் அமைய வேண்டும். மூன்றாவது கூறான 'பொருள் உணர்த்தல்' கருத்தாடலில் பயனாகும் மொழி வெளிப்பாடு; குறிப்பிட்ட சூழலில் பொருள் உணர்த்தும் சொற்கள், தொடர்கள் போன்றவற்றை அறிந்துகொள்ள வேண்டும். உள்ளுறை, இறைச்சி, குறிப்புப்பொருள் போன்றவை மொழிக்கூறுகளுக்கு மேற்பட்டவை. நான்காவது கூறான 'உள்ளடக்கம்' படைப்பாளி படைப்பின் வாயிலாகப் புலப்படுத்த நினைக்கும் பொருள். 'யார் யாரிடம் கூறினார்கள்' என்பதைப் புரிந்து கொள்ள நமக்குத் தரப்படுகின்ற ஒரு சிறப்புக்கூறு 'துறை' என்னும் படைப்பில் வருகின்ற சொற்களின் / தொடர்களின் அடிப்படையில், பாடலைத் தனிப்படுத்திப் பார்க்கும் போது படைப்பு புரிகின்றதா என்பதையே இந்த ஆய்வு எடுத்துக் கொண்டுள்ளது.

*நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று;*
*நீரினும் ஆரள வின்றே - சாரல்*
*கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு*
*பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே (குறுந்தொகை-3)*

'துறை' யைத் தனிப்படுத்திப் பாடலைப் பார்க்கும்போது இது ஓர் உட்பேச்சாக அமையலாமே! யாரையும் விழித்துக் கூறவில்லை; குறிப்புப் பொருளும் இல்லை. ஆகவே, ஒரு திறந்த கூற்றாகவே காணலாம்.

*நோம்என் நெஞ்சே! நோம்பின் நெஞ்சே*
*இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி*
*அமைதற் கமைந்தநங் காதலர்*
*அமைவிலர் ஆகுதல் நோம்என் நெஞ்சே. (குறுந்தொகை-4)*

இங்கு நெஞ்சை விளிப்பது போலப் பல பாடல்களிலும் 'அதுகொல் தோழி' (குறுந்தொகை 5), 'பெருங்கல் நாட' (குறுந்தொகை 225) போன்ற சொற்களை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

படைப்பாளிக்கும் வாசிப்பவருக்கும் இடையே ஒரு 'முன்னேற்பாடு - முன்னறிவு' தேவை. இம்முன்னறிவு இல்லையெனில் படைப்பாளியின் நோக்கம் நிறைவேறாமல் போகிறது. ஆக, கருத்துப் புலப்படுத்தம் நடைபெற படைப்பாளிக்கும் வாசிப்பவருக்கும் இடையில் இலக்கியம் சார்ந்த - கருத்தாடல் சார்ந்த - மொழிசார்ந்த ஓர் 'ஒப்பந்தம்' தேவையாகிறது. அந்த ஒப்பந்தத்தை நான்கு துணைச்செயல்கள் வழியாகப் பெறலாம்.

1. சுட்டுப்பொருள்
2. பின்புல அறிவு
3. உணர்த்து பொருள்
4. கண்டறி பொருள்

இந்நான்கு கூறுகளும் ஒரு சேர வரும்போதுதான் தகவல் பரிமாற்றம் நடக்கிறது.


முன்னர் எடுத்துக்காட்டிய
'நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று'

என்ற பாடலையும்

*யாயும் ஞாயும் யாரா கியரோ*
*எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்*
*யானும் நீயும் எவ்வழி அறிதும்*
*செம்புலப் பெயனீர் போல*
*அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே* *(குறுந்தொகை-40)*

என்ற பாடலையும் எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

இவ்வாறாகப் படைப்பவருக்கும் வாசிப்பவருக்கும் இடையில் மொழியளவில் ஓர் ஒப்பந்தம் இருப்பது போலவே ஒருதலைக் கருத்தாடலில் இலக்கியத்தின் வடிவமும் வடிவமைப்பும் மிகச்சிறந்த பங்களிப்பைக் கொடுக்கிறது. இதைக் கீழ்வருமாறு காட்டலாம். பாடலின் போக்கை ஆறு நகர்வுகள் வழியாக அமைக்கலாம். இந்நகர்வுகளுக்கு ஒரு சில சொற்கள் / தொடர்கள் நகர்த்திகளாக அமைகின்றன.




தொடக்க நகர்வு

தொடக்க நகர்வு என்பது பாடலின் தொடக்கமாகப் பெரும்பாலும் அமைகிறது அல்லது பாடலின் நடுவே ஒரு சொல்லாகவோ ஒரு தொடராகவோ அமைகிறது. இதன் பண்பு கவனத்தை ஈர்த்தல் அல்லது யாரை ஈர்க்க நினைக்கிறதோ அவரைப் பற்றிய தகவல்களைத் தருதல். தொடராக அமையும் போது பல அடைகள், விளக்கங்கள் வந்தமையும். இங்கிருந்தே பாடலின் தொடர்களும் உள்ளடக்கமும் நகரத் தொடங்குகின்றன. 'கண்ணிகள்' என்பவை ஒரு சொல்லோ தொடரோ திரும்பத் திரும்ப வருதல். தகவலைத் தருதலுக்கான குறிப்பு, செயலை வழிநடத்துவதற்கானது இந்நகர்வு.

*சுடர்த் தொடீ கேளாய்.....                    (கலித்தொகை-)*

*........ வாழி தோழி...                    (குறுந்தொகை-106)*

*......... பெருங்கல் நாட               (குறுந்தொகை-225)*

*......... தோழி!                              (குறுந்தொகை-254)*

*உரைத்திசின் தோழி......            (குறுந்தொகை-302)*

இவற்றோடு கண்ணிகளாக வருபவையும் உண்டு.

*நோம் என் நெஞ்சே; நோம் என் நெஞ்சே                    (குறும். 4)*

*அகவன் மகளே! அகவன் மகளே!                                (குறும். 23)*

ஈர்க்க நினைக்கின்றவற்றைக் காட்டுவதற்கான தொடர்களும் உண்டு. பெரும்பான்மையும் தலைவனைப் பற்றிக் கூறும்போது வருகின்றது.

*........ பெரும்புனல் ஊர.                      (ஐங்குறுநூறு-65)*

*சிற்றில் நற்றூண் பற்றி......*

*பழியும் அஞ்சும் பயமலை நாடன்..          (குறும். 143)*

*வரையிழி அருவியின் தோன்றும் நாடன்            (குறும். 106)*

நிலைப்படுத்தல் நகர்வு

தொடக்க நகர்வுக்குத் துணைக்கூறாக அமையும் நகர்வு இது. கட்டமைவு நகர்வுக்கும் தொடக்க நகர்வுக்கும் இடையே பாலமாக அமையும் இது. கேள்வி, கட்டளை, மனப்பான்மை, சிறுகூற்றுகள் போன்றவை அமைவதுண்டு.

*சிற்றில்........*

*........ சிறுபட்டி மேல் ஓர் நாள்*

அடுத்து வருகின்ற கட்டமைவுக்கு இது பாலமாக அமைவது காண்க.

கட்டமைவு நகர்வு

இந்நகர்வுதான் பாடலின் முக்கியமான பங்காகிறது.

*அன்னையும் யானும் இருந்தேமா, இல்லிரே!*
*உண்ணுநீர் வேட்டேன் என வந்தாற்கு, அன்னை*
*அடர் பொற் சிரகத்தால் வாக்கி, சுடரிழாய்!*
*உண்ணுநீர் ஊட்டிவா! என்றாள், என யானும்*
*தன்னை அறியாது சென்றேன்;*

கதைப்பாங்காக நடந்த நிகழ்ச்சியை ஒரு கட்டமைப்பாகக் கூறுவது.

தொடர் செயல் நகர்வு

நீண்ட பாடல்களில் இந்த நகர்வைக் காணலாம் குறுந்தொகை, ஐங்குறுநூறு போன்ற அடிகள் குறைந்த பாடல்களில் பெரும்பாலும் வருவதில்லை.

*மற்று என்னை*
*வளை முன் கை பற்றி நலிய, தெருமந்திட்டு*
*அன்னாய்! இவன் ஒருவன் செய்தது காண் என்றேனா,*
*அன்னை அலறிப் படர்தர, தன்னை யான்,*
*உண்ணுநீர் விக்கினான் என்றேனா, அன்னையும்*
*தன்னை புறம் அழித்து நீவ, மற்று என்னைக்*

குவி நகர்வு

பாடலின் மொத்தக் கருத்தாடலின் குவி பகுதி இதுவே. பெரும்பாலும் கடைசி அடிகளாக வருகின்ற இரண்டு வரிகள் / தொடர்கள் பாடலின் முழுப்பொருளையும் குவித்துத் தருவதைக் காணலாம்.

*..... அன்புடை நெஞ்சம்தாம் கலந்தனவே                    (குறும். 40)*

*...... நாடனொரு நட்பே                                   (குறும். 3)*

*கங்குல்வெள்ளம் கடலினும் பெரிதே               (குறும். 387)*

*யார்வாய்க் கேட்டனைக் காதலர் வரவே                    (குறும். 75)*

குவிதல் ஓர் உத்தி அதையே எல்லாப் பாடல்களிலும் காணுகிறோம். சில வேளைகளில் இந்தக் குவிநகர்வு ஒரு மீமொழியாக / மீஉரையாக அமைவதைக் காணலாம். படைப்பாளியின்

உள்நோக்கமே வாசிப்பவர் இந்த மீமொழிக் கூறை அறிந்து கொள்ள வேண்டும் என்பதே! அதுவே படைப்பின் அற்றத்தை அல்லது முடிவைக் காட்டுவதாகும்.

இக்குவி நகர்வு என்பது கருத்துக்குவிவைக் காட்டுகிறது என்பதோடு இதற்கு முன்வந்த உரைகட்டுகளுக்குப் பதிலாகவும் அமையும்.

எதிரொளிப்பு நகர்வு

பெரும்பாலும் இந்த நகர்வு வாசிப்பவரின் மனப்பான்மைக்கு விடப்படுகிறது. குறுந்தொகை, ஐங்குறுநூறு போன்றவைகளில் இதனை அடிப்படையாகக் கொண்டு பதிலளிப்பதும், விமர்சனம் செய்வதும் தொடர்ந்து பாடலின் 'உரைவீச்சு' வெளிப்படுகிறது.

இக்கட்டுரையில் வடிவமைப்பாகத் தரப்பட்டுள்ள எல்லா நகர்வுகளும் எல்லாப் பாடல்களுக்கும் வராது. முன்னர் கூறியது போல நீண்ட பாடல்களில் முழுவதுமாக கொடுத்துள்ளவாறே பொருந்தி விடுகிறது. தொடர் செயல் நகர்வு ஒரு விருப்பக் கூறாகும். எடுத்துக்காட்டாக,

*யாயும் ஞாயும் யாரா கியரோ*
*எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்*
*யானும் நீயும் எவ்வழி அறிதும்*
*________________________________*
*செம்புலப் பெயனீர் போல*
*அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே* (குறுந்தொகை-40)

தொடர் செயல் இங்கு வரவேண்டும். ஆனால் குவிநகர்வுக்குச் சென்று விடுகிறது.

முடிவுரை

கருத்தாடல் நோக்கில் சங்க இலக்கியப் கூற்றுப் பாடல்கலை நன்கு ஆராயும் போது இலக்கிய உத்திகளும் மானுட மேம்பாட்டின் கருத்தாடல் இலக்கியதின் வழியும் கோட்பாடுகளின் அடிப்படையிலும் வெளிப்படுத்தும் விதமாக கூற்றுப்படல்கள் அமைந்துள்ளன்.

துணைநூல்கள்

நாகராசன்ஆ.உ.வீ., குறுந்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் லிட் (பி), சென்னை, முதற்பதிப்பு – 2004.

இளம்பூரணர் (ஆ.உ), தொல்காப்பியம் பொருளதிகாரம், சுரதா பதிப்பகம், சென்னை
முதற்பதிப்பு –2005 .

சாமிநாதையர்(ஆ.ப) வே.உ. சங்க இலக்கியத் தொகுப்புகள் மூலமும் உரையும்
உசாமிநாதையர் நுல் நிலையம்.வே., சென்னை, முதற்பதிப்பு 2000

********* ********* ********** ********* ********* ********** ********** **********